# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

# கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர)ப் பரீட்சை - 2020

**இம்முறை பரீட்சைக்காக சகல விண்ணப்பதாரிகளும் நிகழ்நிலை (online) முறைமையிலேயே விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும்.** நிகழ்நிலை முறைமையின் விண்ணப்பப்படிவத்தின் அச்செடுத்த பிரதியொன்றை தபால் மூலம் இலங்கை பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பி வைப்பது கட்டாயமானது என்பதை கவனத்திற் கொள்ளவும். விண்ணப்பத்தை பூர்த்தி செய்வதற்கான அறிவுறுத்தல்களை, முறைமைக்குள் (system) நுழைந்தால் (2.1 இல் கவனஞ் செலுத்துக.) உரிய விபரங்களை தரவிறக்கம் செய்து கொள்ள முடியும்.

மேற்படி பரீட்சைக்குத் தனிப்பட்ட முறையில் தோற்றுவதற்கான விண்ணப்பப்படிவங்கள் 2020 ஜூலை மாதம் 22ஆம் திகதி முதல் ஓகஸ்ட் மாதம் 31 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும். சகல தனிப்பட்ட விண்ணப்பதாரிகளும் இவ் அறிவித்தலை முழுமையாக நன்கு வாசித்து விளங்கிக் கொண்டு தமது விண்ணப்பப்படிவத்தை நிகழ்நிலை முறைமையில் (Online) பூரணப்படுத்த வேண்டும். விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்யும் போது பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தெரிவு செய்த **நகரத்தையும் பாடங்களையும்** சரியாக குறிப்பிடுவதில் விசேட கவனம் செலுத்த வேண்டும். மாற்றங்களை மேற்கொள்வதற்காக பின்னர் விடுக்கப்படும் வேண்டுகோள்கள் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

## 02. விண்ணப்பப்படிவம்

தரப்பட்ட அறிவுறுத்தல்களுக்கமைய நிகழ்நிலை (Online) முறைமையில் விண்ணப்பப்படிவத்தை பூரணப்படுத்தி அதன் PDF கோவையை அச்சுப்பிரதியெடுத்துக் கொள்ள வேண்டும். அச்சுப் பிரதியை உங்களது கையொப்பத்துடனும் உங்களது பிரிவுக்குரிய கிராம அலுவலரின் கையொப்பத்துடனும் பரீட்சைத் திணைக்களத்திற்கு தபால் மூலம் அனுப்பி வைக்கவும். **அப்பிரதியை பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்காத விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.**

**பாடசாலையிலிருந்து விலகி விடுகைப் பத்திரத்தை பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரிகள் மாத்திரமே இப் பரீட்சைக்கு தனிப்பட்ட பரீட்சார்த்திகளாக விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களாவர். பாடசாலையில் கற்றுக்கொண்டே தனிப்பட்ட பரீட்சார்த்தியாக விண்ணப்பிப்பது முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. அவ்வாறு தோற்றுவது கண்டறியப்படின் பரீட்சைப் பெறுபேறு இரத்துச் செய்யப்படுவதுடன் எதிர்காலத்தில் பரீட்சைக்குத் தோற்றுவதும் தடைசெய்யப்படும்.**

### 2.1 முறைமைக்குள் பிரவேசிப்பதற்கும் விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்வதற்குமான தொழில்நுட்ப அறிவுறுத்தல்கள்

i) விண்ணப்பப்படிவத்தை பூர்த்திசெய்வதற்காக இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் "www.doenets.lk" எனும் உத்தியோக பூர்வ இணையத்தளத்தினுள் நுழைக.

ii) Online Application' எனும் தளத்தை (Tile) தெரிவு (Click) செய்க.

iii) G.C.E.O/L - 2020 Application for student Registration (Private) எனும் Tile ஐ தெரிவு செய்வதன் மூலம் தனிப்பட்ட விண்ணப்பதாரிகள் பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும்.

iv) Menu இல் உள்ள "Technical Instructions'' என்பதைத் தெரிவு (Click) செய்வதன் மூலம் விண்ணப்பப்படிவங்களைப் பூர்த்தி செய்வதற்காக விண்ணப்பதாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ள தொழில்நுட்ப அறிவுறுத்தல்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

2.2 2020 ஓகஸ்ட் 31ஆம் திகதிக்குப்பின் இப்பரீட்சைக்கான விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியாது. விண்ணப்பதாரிகள் விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்த பின் 28 செ.மீ X 21 செ.மீ அளவிலான (A4) வெள்ளைத்தாளின் இரு பக்கங்களிலும் அதனை அச்சுப் பிரதி எடுத்தல் வேண்டும். **விண்ணப்பப்படிவத்தை 2020 ஓகஸ்ட் 31 ஆம் திகதியோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக்கூடியதாக பரீட்சை ஆணையாளர் நாயகம், த.பெ 1503, கொழும்பு** எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல். குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

2.3 **ஒரு விண்ணப்பதாரி ஒரு விண்ணப்பப்படிவத்தை மாத்திரமே அனுப்ப வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட விண்ணப்பப்படிவங்கள் அனுப்பி வைத்தால் சகல விண்ணப்பப்படிவங்களும் இரத்துச் செய்யப்படும் என்பதுடன் அப்பரீட்சார்த்தி தொடர்பாக சட்டத்திற்கமைவாக நடவடிக்கையும் எடுக்கப்படும். பரீட்சைப் பெறுபேறுகளை வழங்கிய பின்னராயினும் இப்படியான முறைகேடான செயல் உறுதிப்படுத்தப்படின் பெறுபேற்றை இரத்துச் செய்து உரிய சட்டத்திற்கமைவாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.**

**03. பரீட்சைக் கட்டணம் செலுத்துதல்**

பரீட்சைக் கட்டணத்தை தபால் அலுவலகத்தின் மூலமோ வங்கி அட்டைகள் (Online Payment) மூலமோ செலுத்த வேண்டும்.

3.1 தபால் அலுவலகத்தின் மூலம் கொடுப்பனவு மேற்கொள்வீர்களாயின் "Payment method" இன் கீழுள்ள "Pay by post" எனும் நிகழ்ச்சியைத் தெரிவு செய்க. முத்திரை மூலமோ காசுக்கட்டளை மூலமோ பரீட்சைக் கட்டணத்தை செலுத்த முடியாது. பரீட்சைக் கட்டணமாக உரிய தொகையை அண்மையிலுள்ள தபால் / உப தபால் அலுவலகத்தில் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை அச்சுப்பிரதியெடுத்த விண்ணப்பப்படிவத்தின் 14ஆம் இலக்கத்தின் கீழ் ஒட்டவும். 2020 ஜுலை 22ஆம் திகதியிலிருந்து 2020 ஓகஸ்ட் 31ஆம் திகதி வரை இலங்கையின் சகல தபால் / உப தபால் அலுவலகங்களில் இப்பற்றுச்சீட்டை விநியோகிப்பதற்காக ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

3.2 வங்கி அட்டைகள் (credit / debit cards) மூலம் பணம் செலுத்துவதற்காக "Payment method" இன் கீழுள்ள "Pay by credit / debit" நிகழ்ச்சியைத் தெரிவு செய்தல் வேண்டும்.

3.3 பரீட்சைக் கட்டணம்

| பாட எண்ணிக்கை | 1 | 2 | 3 | 4 | 5 | 6 - 9 |
|---|---|---|---|---|---|---|
| கட்டணம் ரூபா | 100/- | 150/- | 200/- | 250/- | 300/- | 350/- |

**04**. ஒரு உறையினுள் ஒரு விண்ணப்பப்படிவத்தை மட்டுமே இட்டு அனுப்ப முடியும். அனுப்பும் உறையின் இடது பக்க மேல் மூலையில் **"க.பொ.த.(சா.தர)ப் பரீட்சை 2020 - நகர எண் ............ நகரம் ............"** என தெளிவாகக் குறிப்பிட வேண்டும். இக்கோடுகளில் தெரிவு செய்த நகர எண்ணையும் நகரத்தையும் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். ஏதேனும் நகரமொன்றில் பரீட்சை நிலையமொன்றை அமைப்பதற்கு போதிய எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் இல்லையெனின், அண்மையிலுள்ள நகரத்தில் தோற்றுவதற்கு ஒழுங்கு செய்யப்படும்.

**05**. நீங்கள் தெரிவு செய்யும் பாடங்களும் நகரமும் மிகவும் முக்கியமானது. **ஆதலால் அச்சுப்பிரதியெடுத்த விண்ணப்பப்படிவத்தை தபாலில் சேர்ப்பதற்கு முன்னர் மிகவும் கவனமாக மீண்டும் ஒரு முறை வாசித்து அதில் குறிப்பிடப்பட்டுள்ள பாடங்கள், நகரம், ஏனைய விவரங்கள் என்பன சரியானவையா என பரீட்சிப்பதுடன் மேலும் ஒருவரால் சரிபார்த்து உறுதிப்படுத்துவது மிக முக்கியமானதாகும்.**

**06**. நீங்கள் சமர்ப்பித்த விண்ணப்பப்படிவத்திலுள்ள விவரங்களும் உங்களுக்கு கிடைக்கப்பெறும் அனுமதி அட்டையிலுள்ள விபரங்களும் தொடர்பாக ஏதேனும் திருத்தங்கள் செய்யவேண்டியிருப்பின் அனுமதி அட்டை கிடைத்தவுடன் உடனடியாக பரீட்சைத் திணைக்களத்தின் பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்பு, பெறுபேற்றுக் கிளைக்கு எடுத்துவரல் வேண்டும்.

**07.** **தனிப்பட்ட விண்ணப்பதாரிகள் தமது நிரந்தர வதிவிட முகவரியை குறிப்பிட வேண்டுமென்பதுடன் தாம் கல்விகற்கும் தனியார், சர்வதேச பாடசாலைகளின் பெயர், முகவரியை குறிப்பிட முடியாது. அவர்கள் தமது தனிப்பட்ட தொலைபேசி இலக்கத்தையும் குறிப்பிடல் வேண்டும்.**

**08. ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல்**

பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சார்த்திகள் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டையை அல்லது செல்லுபடியாகும் கடவுச்சீட்டை அல்லது செல்லுபடியாகும் சாரதி அனுமதிப் பத்திரத்தை கட்டாயமாகச் சமர்ப்பிக்க வேண்டும்.

தேசிய அடையாள அட்டை இல்லாத விண்ணப்பதாரிகள் அதற்குரிய விண்ணப்பப்படிவத்தை தாமதமின்றி கிராம அலுவலர் ஊடாக ஆட்பதிவு திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்திற்கு விண்ணப்பங்களைச் சமர்ப்பித்து தமது தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

**09**. இப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கு **விசேட தேவையுடைய** விண்ணப்பதாரிகள் இருப்பின் "Candidats with Special Needs " இன் கீழே தகவல்களை பூர்த்தி செய்வது கட்டாயமானது.

**பார்வைக் குறைபாடு / கேட்டற் குறைபாடு / வேறு விசேட தேவைகளுள்ள விண்ணப்பதாரிகள்** விண்ணப்பப்படிவத்தின் இடது பக்க மேல் மூலையில் சிவப்பு நிறத்தினால் **"பார்வைக் குறைபாடு / கேட்டற் குறைபாடு / வேறு விசேட தேவையுள்ள விண்ணப்பதாரி"** என குறிப்பிடுக.

**10**. **முக்கிய கவனத்திற் கொள்ள வேண்டியவை :**

10.1 இப்பரீட்சைக்கென செலுத்தப்பட்ட கட்டணம் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அல்லது மீளளிக்கப்படவோ அல்லது வேறு பரீட்சைக்கான கட்டணமாக மாற்றப்படவோ இடமளிக்கப்படமாட்டாது.

10.2 **பரீட்சார்த்திகள் பரீட்சைக்கு விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பித்த பின்னர் எக்காரணத்திற்காகவேனும் விண்ணப்பித்த பரீட்சை நிலையமோ, ஊடக மொழியோ அல்லது பாடங்களோ பின்னர் மாற்றம் செய்யப்படமாட்டாது. எனவே தங்களின் விண்ணப்பப்படிவத்தை சரியாகப் பூர்த்தி செய்ய வேண்டும்.**

10.3 விண்ணப்பப்படிவம் கோரப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் அஞ்சல் அலுவலகத்திற்கு பணம் செலுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களும், இறுதித் தினத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்களும் நிராகரிக்கப்படும்.

(ஈ) இரண்டாம் பாடத்தொகுதிக்குரிய கீழே குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பெயரிடப்படும் பாடசாலையொன்றில் பதிவுசெய்து செய்முறைப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். இத்தேவையைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பதாரிகள் எழுத்துப்பரீட்சைக்குத் தோற்றியிருப்பினும் பெறுபேறு வழங்கப்படமாட்டாது.

(40) சங்கீதம் (கீழைத்தேயம்)
(41) சங்கீதம் (மேலைத்தேயம்)
(42) சங்கீதம் (கர்நாடகம்)
(44) நடனம் (சுதேச)
(45) நடனம் (பரதம்)
(50) நாடகமும் அரங்கியலும் (சிங்களம்)
(51) நாடகமும் அரங்கியலும் (தமிழ்)
(52) நாடகமும் அரங்கியலும் (ஆங்கிலம்)

மேற்படி விடயம் தொடர்பாக ஏதேனும் விசாரணைகள் இருப்பின் பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி இலக்கம் : 011 - 2784208 / 0112784537
தொலைநகல் இலக்கம் : 011 – 2784422

பி.சனத் பூஜித
பரீட்சை ஆணையாளர் நாயகம்

தொடர் இல : 6/4/OL/2020
பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்பு, பெறுபேற்றுக் கிளை,
இலங்கை பரீட்சைத் திணைக்களம்
த.பெ.இல 1503, கொழும்பு.
22.07.2020

# கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சா தர)ப் பரீட்சை - 2020
## விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்வதற்கான அறிவுறுத்தல்கள்

01. **முறைமைக்குள் பிரவேசித்தல் / தனிப்பட்ட தகவல்களை உட்பிரவேசித்தல்**

1.1 விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்வதற்காக இலங்கை பரீட்சைத் திணைக்கள www.doenets.lk உத்தியோக பூர்வ இணையத்தளத்தினுள் நுழைக.

1.2 "online applications" எனும் Tileஐ Click செய்க

1.3 "G.C.E.(O/L ) Examination - 2020 Application for student Registration (Private)" Iconஐ (Tile) தெரிவு செய்க.

1.4 **Availability of the National Identity Card**

தங்களிடம் தேசிய அடையாளஅட்டை இருப்பின் “Yes" ஐ தெரிவுசெய்க.

a. தேசிய அடையாளஅட்டை இலக்கத்தைக் குறிப்பிடவும்.
b. Title தெரிவு செய்க
c. முழுப்பெயரைக் குறிப்பிடுக.

உங்களிடம் தேசிய அடையாளஅட்டை இல்லை எனின் “No”ஐ தெரிவுசெய்து ஆளடையாள இலக்கத்தைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

a. முழுப்பெயரைக் குறிப்பிடுக.
b. பிறப்புச்சான்றிதழின் இலக்கத்தை குறிப்பிடுக.
c. செல்லிடத் தொலைபேசி இலக்கத்தை குறிப்பிடுக.

மேற்கூறப்பட்ட a,b,c என்பவற்றுக்குரிய தகவல்களை வழங்கி உறுதிப்படுத்திய பின்னர் நீங்கள் குறிப்பிட்ட செல்லிடத் தொலைபேசி இலக்கத்திற்கு அடையாள இலக்கம் ஒன்று வழங்கப்படும்.

> பிறப்புச்சான்றிதழிலுள்ளவாறு முழுப்பெயரை ஆங்கில Capital எழுத்தில் எழுதுதல் வேண்டும்.
> முதலெழுத்துக்களுடன் பெயரை எழுத வேண்டாம்.
> உதாரணம் : JEYARASA JEYANTHINI
> முறைமைக்குள் (System) உட்புகுத்த முடியாத பெயர் இருப்பின் (90 எழுத்துக்களுக்கும் மேற்பட்டதாயின்) விண்ணப்பப்படிவத்தில் அச்சிட்ட பிரதியின் மேலே முழுப்பெயரையும் குறிப்பிடுக.

1.5 Date of Birth

பிறப்புச்சான்றிதழிலுள்ளவாறு பிறந்த திகதியை உள்ளடக்குதல் அல்லது தெரிவு செய்தல்.

1.6 Gender

ஆண் / பெண் குறிப்பிடுவதற்கு ஆண் எனின் "Male" எனவும் பெண் எனின் "Female" எனவும் தெரிவு செய்க.

1.7 தனிப்பட்ட தொலைபேசி இலக்கம் (செல்லிடம்):

தனிப்பட்ட தொலைபேசி இலக்கம் (தற்போதைய):

மின்னஞ்சல் முகவரி:

1.8 Private Address

முகவரி : நிரந்தர முகவரியை **ஆங்கில Capital எழுத்தில்** குறிப்பிடவும்.",'-.;_" இக்குறியீடுகள் எதனையும் பயன்படுத்த வேண்டாம்.

a. Home address : தனிப்பட்ட முகவரியைக் குறிப்பிடவும் (தபால் நகரத்தைக் குறிப்பிட வேண்டாம்.)
b. Postal town : தபால் நகரத்தை குறிப்பிடுக.

> **தற்கால வதிவிட முகவரியையோ , தனியார் /சர்வதேச பாடசாலையின் முகவரிகளையோ ஒருபோதும் குறிப்பிட வேண்டாம்.**

**அடுத்த செயல்முறைக்காக** Next Icon **ஐ அழுத்தவும்**

02. **Details of the Examination**

2.1 District and Town that you wish to appear for the examination

தெரிவு செய்யும் மாவட்டமும் நகரமும் :

நீங்கள் பரீட்சைக்கு தோற்றுவதற்கு தெரிவுசெய்த மாவட்டத்தையும் நகரத்தையும் தெரிவு செய்க. நீங்கள் **பிழையான நகரத்தை நீங்கள் தெரிவு செய்யின் மிகத்தூரத்திலுள்ள பரீட்சை நிலையத்திற்கு அனுமதிக்கப்படும் வாய்ப்பு உண்டு**. நீங்கள் வேண்டிக்கொண்ட பரீட்சை நிலையத்தை பின்னர் மாற்றம் செய்ய முடியாது.

2.2 Medium of Examination
தெரிவுசெய்த மொழிமூலம் :

a. தோற்றும் மொழிமூலத்தை தெரிவுசெய்க
b. இரண்டு மொழி மூலத்தில் தோற்றுவதாயின் Bilingual (இருமொழி)ஐ தெரிவுசெய்க. ஆங்கில மொழிமூலமாயின் அதற்கு மேலதிகமாக தாம் தோற்றும் மொழிமூலத்தை தெரிவு செய்ய வேண்டும். அதற்கமைய சிங்களம் / ஆங்கிலம் (Sinhala / English) அல்லது தமிழ் / ஆங்கிலம் (Tamil / English) தெரிவு செய்ய வேண்டும். ஆனால் **சிங்களமும் தமிழும் என இரண்டு மொழிமூலங்களிலும் ஒரே தடவையில் பரீட்சைக்குத் தோற்ற முடியாது.**

2.3 நீங்கள் தோற்ற வேண்டிய பாடத்தை தெரிவு செய்க.
நீங்கள் இரு மொழிமூல விண்ணப்பதாரி எனின் மாத்திரம் ஒவ்வொரு பாடங்களுக்கு எதிரேயும் நீங்கள் தோற்றுவதற்கு எதிர்பார்க்கும் மொழிமூலத்தைத் தெரிவுசெய்க.

2.4 நீங்கள் பாடங்களைத் தெரிவுசெய்ததன் பின்னர் தோற்றும் பாடங்களின் தொகையும் செலுத்தவேண்டிய கட்டணமும் காட்டப்படும். அவை சரியாயின் மட்டுமே

**அடுத்த செயல்முறைக்காக Next Icon ஐ அழுத்தவும்**

## 03. Payment Methods

பரீட்சைக் கட்டணம் தபால் அலுவலகத்தின் மூலமோ வங்கி அட்டைகள் (Online Payment) மூலமோ மேற்கொள்ள வேண்டும்.

3.1 தபால் அலுவலகத்தின் மூலம் கொடுப்பனவை மேற்கொள்வீர்களாயின் “Payment method” இன் கீழுள்ள “Pay by post” எனும் நிகழ்ச்சியைத் தெரிவு செய்க. **முத்திரை மூலமோ காசுக்கட்டளை மூலமோ பரீட்சைக் கட்டணத்தை செலுத்த முடியாது.** பரீட்சைக் கட்டணமாக உரிய தொகையை அண்மையிலுள்ள தபால் / உப தபால் அலுவலகத்தில் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை அச்சுப்பிரதியெடுத்துக் கொண்ட விண்ணப்பப்படிவத்தின் இல 14 இல் ஒட்ட வேண்டும். 2020 ஜுலை 22ஆம் திகதியிலிருந்து 2020 ஓகஸ்ட் 31ஆம் திகதி வரை இலங்கையின் சகல தபால் / உப தபால் அலுவலகங்களில் இப்பற்றுச்சீட்டை விநியோகிப்பதற்காக ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

3.2 வங்கி அட்டைகள் (credit / debit cards) மூலம் பணம் செலுத்துவதற்காக "Payment method" இன் கீழுள்ள "Pay by credit / debit card' நிகழ்ச்சியைத் தெரிவு செய்தல் வேண்டும்.

3.3 பரீட்சைக் கட்டணம்

| பாட எண்ணிக்கை | 1 | 2 | 3 | 4 | 5 | 6 - 9 |
|---|---|---|---|---|---|---|
| கட்டணம் ரூபா | 100/- | 150/- | 200/- | 250/- | 300/- | 350/- |

மேற்படி இறுதித் திகதிக்கு முன்னர் பரீட்சைக் கட்டணம் கட்டப்பட்டிருப்பினும், இறுதித் திகதிக்குப் பின்னர் அனுப்பப்படும் விண்ணப்பப்படிவம் இரத்துச்செய்யப்படும் என்பதை மேலும் அறியத்தருகின்றேன்.

**அடுத்த செயல்முறைக்காக Next Icon ஐ அழுத்தவும்**

## 04 Applicants with special needs : (Vision/ Hearing/ Other)

4.1 விசேட தேவையில்லையாயின் "**No**" என்பதைத் தெரிவு செய்க.

4.2 நீங்கள் ஏதேனும் ஒரு விசேட தேவையுடைய விண்ணப்பதாரி ஒருவராயின் “**yes**” என்பதைத் தெரிவு செய்க. தெரிவு செய்த பின்னர் கிடைக்கப்பெறும் பின்வரும் தகவல்களை பூர்த்தி செய்க.

- Disability Type (குறைபாட்டின் தன்மை)
  - Braille - பிரேல் விண்ணப்பதாரி
  - Hearing - கேட்டற் குறைபாடுடைய விண்ணப்பதாரி
  - Vision - பார்வைக் குறைபாடுடைய விண்ணப்பதாரி
  - Body function/ structure- உடற் குறைபாடுடைய விண்ணப்பதாரி
  - Other - வேறு குறைபாடுடைய விண்ணப்பதாரி
- More details about disability - குறைபாடு தொடர்பான வேறு விவரங்கள்
- If special center required , select it - விசேட பரீட்சை நிலையத்திற்கு விண்ணப்பதாயின் அதனைத் தெரிவு செய்க.

**அடுத்த செயல்முறைக்காக Next Icon ஐ அழுத்தவும்**

## 05 Application Summary

நீங்கள் பூர்த்தி செய்த தகவல்களின் சுருக்கம் காட்டப்படும். நீங்கள் பூர்த்திசெய்யாத தகவல்கள் சிவப்பு நிறத்தில் காட்டப்படும். அத்தகவல்களை பூர்த்திசெய்வதற்கு Back மூலம் மீண்டும் சென்று உரிய தகவல்களை பூரணப்படுத்துக.

**அடுத்த செயல்முறைக்காக Next Icon ஐ அழுத்தவும்**

## 06 Declaration of the applicant

விண்ணப்பதாரியின் உறுதியுரை தொடர்பாக I agree என்பதை click செய்யவும். விண்ணப்பப்படிவத்தை அச்சிடுவதற்கு submit ஐ பயன்படுத்தவும்.

## 07. உள்ளடக்கிய விவரங்களை மாற்றம் செய்தல் (Edit)

7.1 ஏதேனும் மாற்றங்கள் செய்ய வேண்டியேற்படின் விண்ணப்பப்படிவத்தை "submit" செய்வதற்கு முன் செய்தல் வேண்டும்.

7.2 விண்ணப்பப்படிவத்தை "submit" செய்த பின்பு 72 மணித்தியாலயங்களுக்குள் தேசிய அடையாள அட்டை இலக்கத்தையோ அல்லது வழங்கப்பட்ட அடையாள இலக்கத்தையோ பயன்படுத்தி திருத்தங்களை மேற்கொள்ள முடியும்.

7.3 தேசிய அடையாளஅட்டை இல்லையெனில் தகவல்களை திருத்தம் செய்வதற்கு முதலில் வரும் “National Identity Card Availability" எனும் Windows இல் No நிகழ்ச்சியைத் தெரிவு செய்கையில் இரண்டாவதாக வரும் “Unique Cord Retrival" எனும் Windows இல் "close" ஐத் தெரிவுசெய்க. உங்களுக்கு வழங்கப்பட்டும் குறுந்தகவலில் “SMS" இல் குறிப்பிடப்படும் இலக்கத்தை விண்ணப்பப்படிவத்தின் “Registration Cord" இன் கீழ் குறிப்பிடுக. உரிய திருத்தங்களை மேற்கொண்ட பின்னர் மீண்டும் விண்ணப்பப்படிவத்தை தரவிறக்கம் செய்து அச்சுப்பிரதியெடுக்கவும்.

7.4 திருத்தம் செய்யப்பட்ட பின்னர் அச்செடுத்த பிரதியை மட்டும் பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

## 08. விண்ணப்பதாரியின் உறுதியுரை

மிகவும் கவனமாக வாசித்தறிந்த பின்னர் இங்கு பரீட்சார்த்தி கையொப்பத்தை இடுதல் வேண்டும்.
விண்ணப்பப்படிவத்தை அச்சுப்பிரதி எடுத்த பின்னர் முழுப்பெயர் சிங்களம் / தமிழ் மொழியில் பிறப்புச் சான்றிதழிலுள்ளவாறு விண்ணப்பதாரியால் பெயர் எழுதப்படல் வேண்டும்.

உ+ம் : திருச்செல்வம் சஞ்ஜீவன்

## 09. ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல்

தனிப்பட்ட விண்ணப்பதாரிகள் அவர்களின் விண்ணப்பப்படிவத்தில் இருக்கும் கையொப்பத்தை அவர்களது வதிவிடம் அமைந்துள்ள கிராமத்திற்குரிய கிராம அலுவலரால் மாத்திரமே அத்தாட்சிப்படுத்த வேண்டும். அதற்காக தேசிய அடையாள அட்டையை / செல்லுபடியாகும் கடவுச்சீட்டை/ சாரதி அனுமதிப் பத்திரத்தையும் அதன் நிழற்பிரதியையும் கொண்டு செல்லல் வேண்டும்.

## 10. விண்ணப்பப்படிவத்தை நிராகரித்தல்:

1. பாடசாலையிலிருந்து விலகியவர்கள் மட்டுமே தனிப்பட்ட விண்ணப்பதாரிகளாக விண்ணப்பிக்க முடியும். பாடசாலையில் கற்றுக்கொண்டு, தனிப்பட்ட விண்ணப்பதாரியாக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சைக்கு தோற்ற தடைவிதிக்கப்படுவர்.

2. இறுதித் திகதிக்கு பின்னர் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டிருப்பதும், இறுதித்திகதிக்குப் பின்னர் அனுப்பி வைக்கப்படும் விண்ணப்பப்படிவங்களும் நிராகரிக்கப்படும்.

3. தனியார்/சர்வதேச பாடசாலைகளின் முகவரிகளை, தனிப்பட்ட முகவரியாகக் குறிப்பிடப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

4. அச்செடுத்த பிரதியை பரீட்சைத் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்காத விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

# අ.පො.ස.(සා.පෙළ) විභාගය - විෂය ලේඛනය
## க.பொ.த.(சா.தர)ப் பரீட்சை - பாடப்பட்டியல்
## G.C.E.(O/L) Examinations - List of Subjects

➢ ආගම්/சமயம்/ Religion

11 බුද්ධ ධර්මය/பௌத்தம்/ Buddhism
12 ශෛවනෙරි/சைவ நெறி / Saivanery
14 කතෝලික ධර්මය/கத்தோலிக்க திருமறை/ Catholicism
15 ක්‍රිස්තියානි ධර්මය/கிறிஸ்தவம்/ Christianity
16 ඉස්ලාම්/இஸ்லாம் / Islam

➢ භාෂාව හා සාහිත්‍යය/மொழியும் இலக்கியமும்/ Language & Literature

21 සිංහල භාෂාව හා සාහිත්‍යය/சிங்கள மொழியும் இலக்கியமும் / Sinhala Language & Literature
22 දෙමළ භාෂාව හා සාහිත්‍යය/தமிழ் மொழியும் இலக்கியமும்/ Tamil Language & Literature

31 ඉංග්‍රීසි භාෂාව/ஆங்கில மொழி/ English Language
32 ගණිතය/கணிதம்/ Mathematics
33 ඉතිහාසය/வரலாறு/History
34 විද්‍යාව/விஞ்ஞானம்/ Science

➢ පළමු විෂය කාණ්ඩය/முதலாம் பாடத்தொகுதி / Category I

60 ව්‍යාපාර හා ගිණුම්කරණ අධ්‍යයනය/வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும் / Business & Accounting Studies
61 භූගෝල විද්‍යාව/புவியியல்/ Geography
62 පුරවැසි අධ්‍යාපනය /குடியியற் கல்வி / Civic Education
63 ව්‍යවසායකත්ව අධ්‍යයනය/முயற்சியாண்மைக் கற்கை/ Entrepreneurship Studies
64 දෙවන භාෂාව (සිංහල)/இரண்டாம் மொழி (சிங்களம்)/ Second Language (Sinhala)
65 දෙවන භාෂාව (දෙමළ)/இரண்டாம் மொழி (தமிழ்)/ Second Language (Tamil)
66 පාලි/பாளி/ Pali
67 සංස්කෘත/சமஸ்கிருதம்/ Sanskrit
68 ප්‍රංශ/பிரெஞ்சு/ French
69 ජර්මන්/ஜேர்மன்/ German
70 හින්දි/ஹிந்தி/ Hindi
71 ජපන්/ஜப்பான்/ Japanese
72 අරාබි/அரபு/ Arabic
73 කොරියන්/கொரியன்/ Korean
74 චීන/சீன மொழி/ Chinese
75 රුසියන්/ரஷ்யன் / Russian

➢ දෙවන විෂය කාණ්ඩය/இரண்டாம் பாடத்தொகுதி / Category II

40 සංගීතය (පෙරදිග)/ சங்கீதம் (கீழைத்தேயம்) / Music (Oriental)
41 සංගීතය (අපරදිග)/சங்கீதம் (மேலைத்தேயம்)/ Music (Western)
42 සංගීතය (කර්ණාටක)/சங்கீதம் (கர்நாடகம்) /Music (Carnatic)
43 චිත්‍ර/சித்திரம் / Art
44 නැටුම් (දේශීය)/நாட்டியம் (தேசிய) / Dancing (Oriental)
45 නැටුම් (භරත)/நாட்டியம் (பரதம்) / Dancing (Bharata)
46 ඉංග්‍රීසි සාහිත්‍ය රසාස්වාදය/இலக்கிய நயம் ஆங்கிலம்/ Appreciation of English Literary Texts
47 සිංහල සාහිත්‍ය රසාස්වාදය/இலக்கிய நயம் சிங்களம்/ Appreciation of Sinhala Literary Texts
48 දෙමළ සාහිත්‍ය රසාස්වාදය/இலக்கிய நயம் தமிழ்/ Appreciation of Tamil Literary Texts
49 අරාබි සාහිත්‍ය රසාස්වාදය/இலக்கிய நயம் அரபு/Appreciation of Arabic Literary Texts
50 නාට්‍ය හා රංග කලාව (සිංහල)/நாடகமும் அரங்கியலும் (சிங்களம்)/ Drama and Theatre (Sinhala)
51 නාට්‍ය හා රංග කලාව (දෙමළ)/நாடகமும் அரங்கியலும் (தமிழ்)/ Drama and Theatre (Tamil)
52 නාට්‍ය හා රංග කලාව (ඉංග්‍රීසි)/ நாடகமும் அரங்கியலும் (ஆங்கிலம்)/ Drama and Theatre (English)

➢ තෙවන විෂය කාණ්ඩය/மூன்றாம் பாடத்தொகுதி / Category III

80 තොරතුරු හා සන්නිවේදන තාක්ෂණය/தகவல் தொடர்பாடலும் தொழினுட்பவியலும்/ Information & Communication Technology
81 කෘෂි හා ආහාර තාක්ෂණය/ விவசாயமும் உணவுத் தொழினுட்பவியலும்/Agriculture & Food Technology
82 ජලජ ජීව සම්පත් තාක්ෂණවේදය/நீருயிரினவளத் தொழினுட்பவியல்/ Aquatic Bioresources Technology
84 ශිල්ප කලා/நுண்கலை/ Art & Crafts
85 ගෘහ ආර්ථික විද්‍යාව/மனைப்பொருளியல்/ Home Economics
86 සෞඛ්‍යය හා ශාරීරික අධ්‍යාපනය/சுகாதாரமும் உடற்கல்வியும் / Health & Physical Education
87 සන්නිවේදනය හා මාධ්‍ය අධ්‍යයනය/தொடர்பாடலும் ஊடகக் கற்கையும் / Communication & Media Studies
88 නිර්මාණකරණය හා ඉදිකිරීම් තාක්ෂණවේදය/வடிவமைப்பும் நிருமாணத் தொழினுட்பவியலும்/ Design & Construction Technology
89 නිර්මාණකරණය හා යාන්ත්‍රික තාක්ෂණවේදය/வடிவமைப்பும் இயந்திரத் தொழினுட்பவியலும்/ Design & Mechanical Technology
90 නිර්මාණකරණය, විදුලිය හා ඉලෙක්ට්‍රොනික තාක්ෂණවේදය/வடிவமைப்பும் மின் இலத்திரனியல் தொழினுட்பவியலும் / Design, Electrical & Electronic Technology
92 විද්‍යුත් ලේඛනකරණය හා ලඝුලේඛනය (සිංහල)/மின் ஆவணப்படுத்தலும் சுருக்கெழுத்தும் (சிங்களம்)/ Electronic Writing & Shorthand (Sinhala)
93 විද්‍යුත් ලේඛනකරණය හා ලඝුලේඛනය (දෙමළ)/மின் ஆவணப்படுத்தலும் சுருக்கெழுத்தும் (தமிழ்)/ Electronic Writing & Shorthand (Tamil)
94 විද්‍යුත් ලේඛනකරණය හා ලඝුලේඛනය (ඉංග්‍රීසි)/மின் ஆவணப்படுத்தலும் சுருக்கெழுத்தும் (ஆங்கிலம்)/ Electronic Writing & Shorthand (English)

H.6.4.Su list. indd